உ

சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

# தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## வாசிப்பு

## கீழ்ப் பிரிவு (தரம்1,2)

# உழவுத் தொழில்

பண்டைக் காலம்தொட்டே மக்கள் உழவுத் தொழிலைச் செய்து வருகின்றனர்.

விவசாயம் செய்வதற்கு நீர் மிகவும் அவசியம்.

உழவர்கள் மாரி காலத்தில் வேலையை ஆரம்பிப்பார்கள்.

உழவர்கள் கலப்பையில் மாடுகளைப் பூட்டி வயலை உழுவார்கள்.

சில இடங்களில் வயலை உழுவதற்கு உழவு இயந்திரங்களைப் பயன்படுத்துவார்கள்.

நீரைத் தேக்கி வைப்பதற்காக வரம்புகளைக் கட்டுவார்கள்.

நெல்லை விதைத்து நெற் பயிர்கள் வளர்வதைக் கவனிப்பர்.

பசளையிட்டு நீரைத் தேக்கி பயிரை வளர்ப்பார்கள்.

இவ்வாறு வருடத்தில் இரண்டு முறை அல்லது மூன்று முறை பயிர் செய்வார்கள்.

நெற் பயிர் நன்றாக வளர்ந்து உரிய காலத்தில் கதிர் தரும்.

கதிர்கள் நன்றாக வளர்ந்து முற்றிய நெல்லைத் தரும்.

நெல் விளைந்த பின் அருவி வெட்டிச் சூடு மிதிப்பார்கள்.

பல எருது மாடுகளைப் பிணைத்து சூடு மிதிப்பர் அல்லது உழவு இயந்திரம் மூலம் சூடு மிதிப்பர்.

சூடு மிதித்த பின் பதரை நீக்கி நெல்லைச் சுத்தப்படுத்துவார்கள்.

சுத்தப்படுத்திய நெல்லை வீட்டுக்கு வண்டியில் ஏற்றிச் செல்வார்கள்.